# 16

# கம்ப ராமாயணம் கையடைப்படலம் – பகுதி I

### 01 தசரதன் பெருமகிழ்ச்சியடைந்து அரசாட்சி செய்தல்

அரசர் பெருமகன், அகிலம் யாவையும்
விரசுறு தனிக்குடை விளங்க, வென்றி சேர்
முரசு உலி கறங்கிட, முனிவர் ஏத்துற,
கரை செயல் அரியது ஓர் களிப்பின் வைகும் நாள்,

(இ-ள்) அரசர்தம் பெருமகன் - அரசர்களுக்கரசனான தசரதன், அகிலம் யாவைஉம் - உலகம் முழுவதும், விரசு உறு தனி குடை விளங்க - பொருந்திய (தனது) ஒப்பற்ற ஒற்றைவெண் கொற்றக்குடை நிழலில் விளங்கவும், வென்றிசேர் முரசு ஒலி கறங்கிட- வெற்றி பொருந்திய பேரிகைகளின் ஓசை முழங்கவும், முனிவர் ஏத்துற - முனிவர்கள் துதிக்கவும், கரை செய அரியது ஓர் களிப்பின்- கரைகோலுதற்கு அருமையான ஒப்பற்ற ஆனந்தக்கடலிலே, வைகும் நாள்- மூழ்கிவாழுங் காலத்தில்,- (எ-று) 'மண்டபம் பொலியஎய்தினான்' என அடுத்த கவியோடு முடியும்.

### 02. தசரதச் சக்கரவர்த்தி சபாமண்டபஹ் சூசர்தல்.

நனை வரு கற்பக நாட்டு நல் நகர்
வனை தொழில் மதி மிகு மயற்கும் சிந்தையால்
நினையவும் அரியது, விசும்பின் நீண்டது, ஓர்
புனை மணி மண்டபம் பொலிய எய்தினான்.

(இ-ள்) (ஒருநாள்) - நனை வரு - அரும்புகள் நிறைந்த, கற்பகம் - கல்பகவிருட்சத்தையுடைய, நாடு - சுவர்க்கலோகத்திலேயுள்ள, நல் நகர்- சிறந்த (அமராவதியென்னும்) நகரத்தில் வாழ்கின்ற அனைவர்உம் - (தேவர்கள்) எல்லாரும், அணை தர- (இந்திரசபை இதுவென்னுங் கருத்தினால் தாம்) வந்து சேரும்படி, அயிர்க்கும் - சந்தேகிக்கின்ற, சிந்தையான் - மனத்தைக்கொண்டு, நினைய உம் அரியது- நினைத்தற்கும் அருமையானதும், விசும்பின் நீண்டது - தேவலோகத்தளவும் உயர்ந்துள்ளதுமாகிய, ஓர் - ஒரு, மணிபுனை மண்டபம்- இரத்தினகசிதமான சபாமண்டபம், பொலிய- விளக்கமடையும்படி, எய்தினான் (தசரதன்) சேர்ந்தான், (எ-று).

### 03. அங்குச் சக்கரவர்த்தி சிங்காதனத்தில் வீற்றிருத்தல்

தூய மெல் அரியணைப் பொலிந்து தோன்றினான்,
சேய் இரு விசும்பிடைத் திரியும் சாரணர்,
'நாயகன் இவன்கொல்?' என்று அயிர்த்து, நாட்டம் ஓர்
ஆயிரம் இல்லை என்று ஐயம் நீங்கினார்.

(இ-ள்) (அம்மண்டபத்திற் சக்கரவர்த்தி), தூய மெல் அரி அணை- தூய்மையையுடைய மென்மையான சிங்காதனத்திலே, பொலிந்து தோன்றினான் - விளங்கி வீற்றிருந்தான்: (அப்பொழுது



இலவச விநியோகத்திற்காக

அவனை நோக்கி), சேய் இரு விசும்பிடை திரியும் சாரணர் - உயர்ந்த பெரிய ஆகாச மார்க்கத்திலே சஞ்சரிக்கின்ற சாரணரென்னுந் தேவ சாதியார், நாயகன் இவன்கொல் என்று அயிர்த்து - (தங்கள்) தலைவனான தேவேந்திரன் இவன்தானோ என்று (முதலிற்) சந்தேகித்து (பின்பு ஊன்றிப்பார்த்து), நாட்டம் ஓர் ஆயிரம் இல்லை என்று - (இவனுக்கு) ஆயிரங்கண்களில்லை (ஆதலால் இவன் இந்திரனல்லன்) என்று, ஐயம் நீங்கினார் - அச் சந்தேகந் தீர்ந்தார்கள், (எ-று).

**04. அங்கு விசுவாமித்திர முனிவன் வருதல்**

மடங்கல்போல் மொய்ம்பினான் முன்னர், 'மன்னுயிர்
அடங்கலும் உலகும் வேறு அமைத்து, தேவரோடு
இடம் கொள் நான்முகனையும் படைப்பென் ஈண்டு' எனாத்
தொடங்கிய, துனி உறு, முனிவன் தோன்றினான்.

(இ-ள்) மடங்கல் போல் மொய்ம்பினான் முன்னர் - சிங்கம் போன்ற வலிமையையுடையவனாகிய அச்சக்கரவர்த்தியினெதிரில், மன்உயிர் அடங்கல் உ-ம் நிலைபெற்ற உயிர்களெல்லாவற்றையும், உலகுஉம் - (அவை தங்குதற்கு இடமான) உலகங்களையும், வேறு அமைத்து - வேறேபடைத்து, தேவரோடு - (மற்றைத்) தேவர்களுடனே, இடம்கொள் நான்முகனைஉம் - (சத்தியலோகமென்னுஞ் சிறந்த) இடத்தைக் கொண்ட நான்கு முகங்களுடையவனான பிரம தேவனையும், ஈண்டு இப்பொழுதே, படைப்பன்-(வேறு) சிருட்டிப்பேன், எனா- என்று, தொடங்கிய- ஆரம்பித்த, துனிஉறு- பெருங் கோபம்மிக்க, முனிவன்- விசுவாமித்திரன், தோன்றினான்-(எ-று.)

**05. தசரதன் எழுந்து அம்முனிவனை வணங்குதல்**

வந்து முனி எய்துதலும் மார்பில் அணி ஆரம்
அந்தரதலத்து இரவி அஞ்ச, ஒளி விஞ்ச,
கந்த மலரில் கடவுள்தன் வரவு காணும்
இந்திரன் என, கடிது எழுந்து அடி பணிந்தான்.

(இ-ள்) முனி வந்து எய்துதலும் - அம்முனிவன் வந்து சேர்ந்தவுடனே - (சக்கரவர்த்தி), - கந்தம் மலரில் கடவுள் தன் வரவு காணும் - நறுமணமுள்ள தாமரை மலரில் தோன்றிய பிரமதேவனது வருகையை நோக்கிய, இந்திரன் என- தேவேந்திரன் போல, மார்பின் அணி ஆரம் அந்தர தலத்து இரவி அஞ்ச ஒளி விஞ்ச கடிது எழுந்து (தனது) மார்பிலே அணிந்துள்ள இரத்தின ஹாரமானது ஆகாய மார்க்கத்திற் சஞ்சரிக்கின்ற சூரியனும் தோற்கும்படி ஒளி மிகுமாறு (விரைவாக ஆசனத்தை விட்டு) எழுந்திருந்து, அடிபணிந்தான் - (அம்முனிவனது) திருவடிகளை வணங்கினார். (எ-று)

**06. தசரதன் கௌசிகனை உபசரித்து இன்சொல் கூறல்.**

பணிந்து, மணி செற்றுபு குயிற்றி அவிர் பைம் பொன்
அணிந்த தவிசு இட்டு, இனிது அருத்தியொடு இருத்தி,
இணைந்த கமலச் சரண் அருச்சனை செய்து, 'இன்றே
துணிந்தது என் வினைத் தொடர்' எனத் தொழுது சொல்லும்

(இ-ள்) (சக்கரவர்த்தி) - பணிந்து - (முனிவனை) வணங்கி, மணி செற்றுபு குயிற்றி - இரத்தினங்களை நெருக்கமாகப் பதித்து, அவிர் பைம் பொன் அணிந்த - விளங்குகின்ற பசும்பொன்னினால் அழகிதாகச்



இலவச விநியோகத்திற்காக

செய்யப்பட்டுள்ள, தவிசு - ஆசனத்தை, இட்டு- சமர்ப்பித்து, அதில் - அவ்வாசனத்திலே, அருத்தியொடு இருத்தி - (அம்முனிவனை) அன்போடு எழுந்தருளப்பண்ணி, இணைந்த கமலம் சரண்- (அவனது இரண்டாகப் பொருந்திய திருவடித்தாமரைமலர்களை அருச்சனைசெய்து- அருச்சித்து, - என் வினை தொடர் இன்றே துணிந்தது என - எனது ஊழ்வினையின் தொடர்ச்சி இப்பொழுதே அழிந்து போய்விட்டது என்று (முகமன்) கூறி , தொழுது சொல்லும்- கைகூப்பிக்கொண்டே பின்னும் கூறுவான் (எ-று)

**07. மற்றும் தசரதன் கௌசிகனைத் துதிக்க, அம்முனிவன் சக்கரவர்த்தியைப் புகழத் தொடங்கல்.**

'நிலம் செய் தவம் என்று உணரின், அன்று: நெடியோய்! என்
நலம் செய் வினை உண்டு எனினும், அன்று; நகர், நீ யான்
வலம் செய்து வணங்க, எளிவந்த இது முந்து என்
குலம் செய் தவம்' என்று இனிது கூற, முனி கூறும்:

(இ-ள்) 'நெடியோய் - பெரியோனே ! யான் வலம் செய்து வணங்க - நான் பிரதட்சிணஞ்செய்து நமஸ்கரிக்கும்படி, (பிரமவிருடிப்பட்டம்பெற்ற), நீ - நகர் - இந்நகரத்தில், எளி வந்த - எளிதில் எழுந்தருளியதாகிய, இது - இந்நன்மைக்குக் காரணம், - நிலம்செய்தவம் என்று உணரின் - இத்தேயம் செய்துள்ள தவமோ என்று ஆலோசித்தால், அன்று - (அதுவும்) அமையாது என் செய் நலம் வினை உண்டு எனின்உம் - யான் செய்துள்ள நல்வினையாயிருக்குமென்றால், அன்று - (அதுவும்) அமையாது; (மற்று என்னையோவெனின்,) 'முந்து என் குலம் செய் தவம் - முன்பு எனதுவமிசத்தார் செய்துள்ள தவமேயாம். என்று, இனிது கூற - (மற்றும் தசரதன் கௌசிகனை நோக்கி ) உபசாரவார்த்தை சொல்ல, முனி கூறும் - விசுவாமித்திரன் சொல்வான் (எ-று) அதனை, மேல் இரண்டு கவிதைகளிற் காண்க.

**08. இதுவும், அடுத்த செய்யுளும் - ஒரு தொடர் கௌசிகன் தசரதனைப் புகழ்தல்.**

என் அனைய முனிவரும் இமையவரும்
இடையூறு ஒன்று உடையரானால்,
பல் நகமும் நகு வெள்ளிப் பனிவரையும்,
பாற்கடலும், பதும பீடத்து
அந் நகரும், கற்பக நாட்டு அணி நகரும்,
மணி மாட அயோத்தி என்னும்
பொன் நகரும், அல்லது, புகல் உண்டோ?
இகல் கடந்த புலவு வேலோய்!

(இ-ள்) இகல் கடந்த - பகைவரை (ப்போரில்) வென்ற, புலவு வேலோய் - (அவர்களது) தசை பொருந்திய வேலாயுதத்தையுடையவனே! - என் அனைய முனிவரர் உம் - என்னைப் போன்ற இருடிச்சிரேட்டர்களும், இமையவர்உம் - தேவர்களும், இடையூறு ஒன்று உடையர் ஆனால் - ஒரு துன்பத்தையுடையவர்களாயின், (அவர்கட்கு), பல் நகம் உம் நகு வெள்ளி பனிவரைஉம் - பலமலைகளையும், அவமதித்துச் சிரிக்கின்ற வெள்ளிமயமான குளிர்ந்த கைலாசபருவதமும், பாற்கடல்உம் - திருப்பாற்கடலும், பதுமபீடத்து அந்நகர் உம் - தாமரை மலரை ஆசனமாகவுடையவனான பிரமனது சத்திய லோகமும், கற்பகம் நாடு அணி நகர்உம்-கல்பகவிருட்சத்தையுடைய சுவர்க்கலோகத்திலுள்ள அழகிய அமராவதிப்பட்டணமும், அணிமாடம் அயோத்தி என்னும் பொன்நகர்உம் - அழகிய உபரிகைகளையுடைய அயோத்தியென்று சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற அழகிய இந்த

நகரமும், அல்லாது- (புகலிடங்களாவன) அல்லாமல், புகல் உண்டுஓ - சரணமடைவதற்கு உரிய இடம் (வேறு) உள்ளதோ? (எ-று)

09. ‘இன் தளிர்க் கற்பக நறுந் தேன் இடை துளிக்கும்
நிழல் இருக்கை இழந்து போந்து,
நின்று அளிக்கும் தனிக் குடையின் நிழல் ஒதுங்கி,
குறை இரந்து நிற்ப, நோக்கி,
குன்று அளிக்கும் குல மணித் தோள் சம்பரனைக்
குலத்தோடும் தொலைத்து, நீ கொண்டு
அன்று அளித்த அரசு அன்றோ, புரந்தரன் இன்று
ஆள்கின்றது? அரச!’ என்றான்.

(இ-ன்) அரச சக்கரவர்த்தியே! இன் - இனிமையான,தளிர் - துளிர்களையுடைய, கற்பகம் கல்பகவிருட்சத்தினது, நறு தேன் துளிக்கும் நிழல் - வாசனை வீசுகிற தேன் இடையிடையே சிந்தப்பெற்ற நிழலிலே, இருக்கை - அரசு வீற்றிருத்தலை, இழந்து வந்து, நின் - உன்னுடைய தளிக்கும். செழித்துள்ள, தனி குடையின்கீழ் - ஒன்றை வெண்கொற்றக் குடையின் நிழலில், ஒதுங்கி சேர்ந்து, குறை இரந்து நிற்ப (தனது) குறையைச்சொல்லி யாசித்து நிற்க, நோக்கி - (அதனைப்) பார்த்தருளி (இரங்கியென்றபடி), குலம் குன்று அளிக்கும் மணி தோள் சம்பரனை - குலப்பருவதங்களையொக்கின்ற அழகிய புயங்களையுடைய சம்பரனென்றும் அசுரனை, குலத்தோடுஉம்,தொலைத்து - வமிசத்தோடு வேரறுத்து கொண்டு (உன்) வசமாக்கிக்கொண்டு, அன்று - அப்பொழுது அளித்த - கொடுத்தருளிய, அரசு அன்று ஓ அரசாட்சியன்றோ, புரந்தரன் இன்று ஆள்கின்றது - இந்திரன் இப்பொழுதும் ஆண்டுவருவது? என்றான் என்று (விசுவாமித்திரன் தசரதனை நோக்கிக்) கூறினான்; (எ.று)



இலவச விநியோகத்திற்காக